வருட சந்தா ரூ. 5. தனிப்பிரதி 1 அணா

ஞாயிறு வெளியீடு.

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர் C. N. அண்ணாதுரை M. A.

" தமிழுக்கும் அமுதென்று பேர்!—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

மலர் 1. | காஞ்சீபுரம் 8—3—42 விசுஷூ மாசி 25உ ஞாயிறு | இதழ் 1.

## "அதோ, வாராண்டி!"

பரதன்

"அதோ, வாராண்டி, கொடிக்கூர்
ஆறுமுகத்தாண்டி"

என்று பரிகாசப் பாட்டுப்பாடி, பல்லைக்காட்டிப் பிச்சைகேட்கும், பரிதாபச்சிறுவனின் கவனம், எனக்கு வந்தது, பவனிவரும் ஆச்சாரியார் விஷயமாக, பத்தி பத்தியாகக் காங்கிரஸ் ஏடுகள் வெளியிட்டபோது. ஆச்சாரியாரை நான்பிச்சைக்காரப் பையனுக்குச்சமமாக்கிப் பேசுவதாக, எண்ணவேண்டாம். பரம்பரை அதுவாக இருந்தாலும், பழக்கம்வேறு என்பார்களே, அதுபோல் தானம் வாங்கும் பூசுர இனத்தவர் என்றபோதிலும், ஆச்சாரியார், அந்தஸ்துப்படைத்தவர்! அதை நான் மறக்கவில்லை! காந்தியாரின் மகனாருக்குக் கிடைத்த "லக்ஷ்மி"யே ஆச்சாரியாரின் திருக்குமாரியல்லவா! அவருக்கென்ன குறை! மாடமாளிகை, மக்கள், மதிப்பு, (மார்க்கட்டு நிலவரத்தின்படி ஏறி இறங்கும்) மகாத்மா சம்பந்தம் எல்லாம் உடையவர். அவரை பிச்சைக்காரக் கோஷ்டியில்சேர்க்க நான்என்னபித்தனா? ஆச்சாரியாரின் பிரசங்கங்களைப் படித்தேன், எனக்கு, மேலே கூறியுள்ள சிந்துபாடிகாசு சேர்க்கும் பயலின்ஞாபகம் வந்தது.

வயற்றிலே ஒரு கையும், மற்றொரு கையைக் காதிலும் வைத்துக்கொண்டு, கழுத்து நரம்பு புடைக்க, கேட்போர் காது அடைக்க, பிச்சைக்காரப் பயல், ஆறுமுகன் வருவதாகப் பாடினால், ஆறுமுகன் வருகிறார் என்று பொருள். வருவாரா அவர். அவருக்கென்ன வேறு வேலையா இல்லை. பாலாபிஷேகமும் பஞ்சாமிர்த அபிஷேகமும் செய்து, பக்திப் பரவசத்தால் பணிந்திடும் பக்தகோடிகள் என்ன, திருப்புகழும் காவடிச் சிந்தும், புதியமெட்டும், கவாயும்கலந்துபாடி அழைக்கும் வித்வான்கள்என்ன, இவ்வளவுஆசாமிகள் அழைக்கும்போதே, வரமனமின்றி, "வள்ளி நாயகனாகவும், தெய்வயானை லோலனாகவும்" வீற்றிருக்கும் அவர், பசிக்கொடுமைக்காகப் பாடிடும் சிறுவனின் பதிகத்துக்காகவேண்டி, மயிலேறியா வருவார்! வருவதில்லை. அது பாடும் பயலுக்குத்தெரியும். வருவார் என்றிருந்தால், அவன் ஏனய்யா, நம்மைக் கெஞ்சுகிறான், நாலுகாசுக்கு, கருணைபொழியும் முகவிலாசத்துடன் கந்தப்பெருமான் வந்தார், கைதந்தார், என்று குதூகலித்து ஆடமாட்டானா! பாட்டைக்கேட்கும் பேர்வழிகளுக்குந்தெரியும், ஆறுமுகனாவது வருவதாவது என்று! இருந்தாலும், அவனும் பாடுகிறான், பலரும் கேட்கிறார்கள். அவன் பாடுவது, பிழைக்க. இவர்கள் கேட்டுத்தொலைப்பது, வேறுபாட்டு கிடைக்காத குறையினால்.

ஆச்சாரியார்பேச்சை ஆரம்பித்தாயே பரதா, ஆறுமுகப்புராணத்திலே முடித்தாயே, இதாளென்ன, என்று கேட்பீர்கள். மன்னிக்க வேண்டுகிறேன். மறதியால், நான் அங்கனம் செய்யவில்லை. காரணத்தோடு தான்!

ஆச்சாரியாரின் இப்போதைய சுற்றுப் பிரயாணத்திலே, அவராற்றிய சொற்பொழிவுகளில், "இதோ வருகிறது சுயராஜ்யம்" என்று சொன்னவண்ணம் இருக்கிறார். "நாளைக்காலையில் காப்பி சாப்பிடுவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம், சுயராஜ்யம் வரப்போவதும். அதுவும் அதிவிரைவில், வேகமாக வருகிறது." என்று ஆச்சாரியார் கூறுகிறார். இந்த அபத்தத்தை நாம்ஏன் பரப்பவேண்டும் என்றுஎண்ணி ஒலிபரப்புங்கருவி கூட ஓரிடத்தில், சாத்வீக சட்ட மறுப்பு செய்ததாகக் கேள்வி!

தேனும் பாலும் ஆறாகஓடும் சுயராஜ்யம் வந்தால் என்று ஆசாரியாரும் அவரது சீடகோடிகளும் கூறி இருக்கிறார்கள், தேர்தல் நடக்கும்போது. இப்போது சுயராஜ்யம், வந்துகொண்டே இருக்கிறதென்று கூறுகிறார்கள். ஆனால் எந்தப்பக்கத்திலும், இன்று இரு

(11-ம் பக்கம் பார்க்க)

# வாழ்க சீனா!

"மன்னரே! உமது நிலைமையை உணர்ந்து அதற்கேற்றபடியான முடுக்குடன் நடவும், மறவாதீர்" என்று **புயூட் பிரபு** போதனை செய்து வைத்ததற்கிணங்க, படாடோபமாக பிரிட்டனை ஆண்டுவந்த மூன்றாம் ஜார்ஜ் மன்னர், ஆச்சரியத்தால் மூக்கின்மீது விரல்வைக்கும் சம்பவமொன்று நடந்தது.

1792-ம் ஆண்டு, மன்னர் ஜார்ஜ், சீனா நாட்டுக்கு தமது விசேஷ தூதராக **மாகார்ட்னீ** சீமானை அனுப்பிவைத்தார். சீனநாட்டை அந்நாளில் ஆண்டுவந்த சக்கிரவர்த்தியின் தர்பாரில்நடந்தசம்பவம் விந்தையானது.

பிரிட்டிஷ் மன்னரின் தூதரை நோக்கி, சீனப் பிரதானிகள், கொலுவீற்றிருக்கும் சீனசக்கிரவர்த்தியின், முன்பு, 9 முறை சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட வேண்டுமென்று கூறினர்.

வந்திருப்பவரோ சீமான்! பிரிட்டிஷ் மன்னரின் தூதர்! அவர் சீனமன்னரின் கொலுமண்டபத்தில் 9 முறை விழுந்து கும்பிடுவதென்றால், மதிப்புமங்கிவிடும். பிரிட்டிஷ் தூதர் யோசித்தார், ஓர்யுக்தி தோன்றிற்று.

"பிரதானியரே! சீன சக்கிரவர்த்திக்கு தாங்கள் கூறுவதுபோன்ற மரியாதை செலுத்த நான் சித்தமாக இருக்கிறேன். ஒரே நிபந்தனை" என்று மாகார்ட்னீ சீமான் மலர்ந்தார்.

"நிபந்தனையா? என்னஅது?" என்று வினவினார் சீனப் பிரதானி.

"எமது ஜார்ஜ் மன்னரின் திருஉருவப் படத்தின் முன்பு, தங்கள் தர்பாரில்என்போல் உள்ள ஒரு சீமான், 9முறை சாஷ்டாங்க தண்டனிடவேண்டும்" என்றார் பிரிட்டிஷ் தூதர்.

"அதுநடவாது, எமது வழக்கம் அதுவல்ல" என்றார் சீனப் பிரதானி.

"உண்மை! வழக்கமற்றதைச் செய்வது கஷ்டந்தான், எனக்கும் சாஷ்டாங்க வணக்கம் செய்யும் வழக்கம் கிடையாது. எமது மன்னரின் முன்பு, முழங்காற் படியிட்டு மரியாதை செலுத்துவதே வழக்கம். அதுபோலவே இங்கும் செய்ய அனுமதியுங்கள்" என்று மாகார்ட்னீ கூறினார்.

அங்கனமே அனுமதிதரப்பட்டது. பிரிட்டிஷ்தூதர் சீனசக்கிரவர்த்தியின் முன்பு முழங்காற் படியிட்டு, தனது மரியாதையைச் செலுத்தினார்.

1792ம் ஆண்டில் நடந்த சம்பவம்இது. இது கேட்ட பிரிட்டிஷ் மன்னரும் ஆச்சரியமடைந்தாராம், சீனசக்கிரவர்த்தியின் சிங்கார வாழ்க்கை அங்கனமிருந்தது, 150 ஆண்டுகளுக்கு முன்புங்கூட! இன்று அந்தச் சீனாவின் இரத்தம் ஆறாக ஓடுகிறது!!

இந்தியாவில் "சீனாதினம்" கொண்டாடப்பட்டு, சீனாவில் "இந்தியா தினம்" கொண்டாடப்பட்டு, இரு நாடுகளும், இரு சகோதரர்கள்போல் தழுவிக்கொண்டுள்ளன. இரண்டையும் ஜப்பான் இம்சிக்கிறது. இந்தியா, ஜப்பான் விஷயமாக என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதை, சீனாதின நடவடிக்கைகள், உலகுக்கும் எடுத்துக்காட்டும். "ஆசியா ஆசியாக்காரருக்கே" என்ற ஜப்பான் ஜாலத்தைக்கண்டு இந்தியா இளிக்க மறுக்கிறது. சீனாவின் இரத்தமும், இந்தியாவின் இரத்தமும், மஞ்சள் பேயனை அடக்க, சிந்தப்படுகிறது. இருநாடுகளும், இன்று துயரத்தில், தொல்லையில், ஆபத்தில், பங்காளிகள்.

பூர்வ பெருமை, பரந்த விஸ்தீரணம், ஏராளமான ஜனத்தொகை, கலை, நாகரீகம், மதம், முதலிய துறைகளில் சீனச் சாம்ராஜ்யமும் இந்திய சாம்ராஜ்யமும், உவமை கூறிக்கொள்ளக்கூடிய விதத்திலே உள்ளன. மேனாடுகளில் மாளிகைகள் கட்டப்படா முன்னம் இந்த இரண்டு சாம்ராஜ்ய சிற்பிகளும் சிங்கார மாளிகைகளை அமைத்தனர். மேனாட்டாரின் கலை கருவிலிருக்கும் போதே, இங்கு கலை புன்னகைபூத்தமுகத்துடனேவிளையாடிக் கொண்டிருந்தது. இரண்டு சாம்ராஜ்யங்களும் மிக்க விஸ்தீரணம் படைத்தன. இந்தியாவில் 40கோடி மக்கள்! சீனாவில் அதைவிட 5கோடி அதிகம். ஆம்! பூர்வ பெருமைகள் பொதிபொதியாகச் சுமந்துகொண்டுள்ள இந்த இரு இடங்களும், இன்று, வறுமையின் வாழ்விடமாக, நெருக்கடியும் ஆபத்தும் நடமாடும் பிரதேசங்களாக உள்ளன.

ஏசுதோன்றுவதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே, சீனசாம்ராஜ்யத்தை **ஹிஷ்யா** என்ற பரம்பரையினர், ஆடம்பரமாக ஆண்டுவந்தனர். பின்னர் **ஷாங்** பரம்பரையினரும், பிறகு **சௌ** பரம்பரையினரும், ஆண்டனர். இந்தப்பரம்பரைகளின் பரிபாலனத்தில், சீனசாம்ராஜ்யத்தில் சீமான்களின் சண்டைகளும், சதிகளும், அதிகார பீடங்களைப்பெற அமளிகளும்நடந்தன. சீமான்களின் களியாட்டத்தைக்கண்ட ஏழைச்சீனர் ஏங்கினர். ஆனால், ஏங்கிப்பயன் என்ன? கடவுளரின் கடாட்சத்தால் சீமான்கள்சொகுசாக வாழ்கின்றனர், நாம் கொடுத்து வைக்கவில்லை என்ற மனப்பான்மை சீனமக்களை, மங்கவைத்தது. நெருப்பு, நீர் வானம் வனம், காற்று, குன்று, ஏதுவும் அங்கே சடவுளே! வீட்டுக்கு வீடு, சமயற்கட்டிலேயும் சாமி உண்டு! பைசாசங்கள் உண்டு! அவைகளை விரட்டியடிக்கும் தெய்வங்கள் உண்டு. பைசாசங்களுக்கு **யின்** என்றும், தெய்வங்களுக்கு **யாங்** என்றும் பெயர். இவ்வளவு தெய்வங்கள் துணை செய்ய, சீனமக்கள், துயரத்தை விருந்தாக உண்டு, வேறுவகையுள்ள காரியம் செய்ய வழியற்றவராய், குடும்பவிருத்தியைப் பெரியகடமை யெனக்கொண்டு, வாழ்ந்து வந்தனர். வாழ்ந்து வந்தனர் என்பதைவிட நடமாடிக் கொண்டிருந்தனர் என்றுகூறுவது பொருத்தமாக இருக்கும். முகத்திலே சோர்வு, உள்ளமும் உடலும் அபின் சேட்டையால், அழுந்துப்போய், சீனமக்கள், குருட்டு நம்பிக்கையாளர்களாக வாடிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கிருந்த குருட்டு நம்பிக்கையின் விசித்திரத்துக்கோர் உதாரணம் கூறுவோம். சீனர், தமது நெற்றியில், முகம்பார்க்கும் கண்ணாடியைக் கட்டித்தொங்க விட்டுக்கொள்வராம். ஏன்? துஷ்டப் பேய்கள் எதிரே வருமாயின், அவைகள் அந்தக் கண்ணாடியில், தமது கொடிய முகங்கள் தெரிவதைக் கண்டு, திகில்கொண்டு, ஓடிப்போய் விடுமாம்!! இத்தகைய மூடத்தனத்தால் முடங்கிக்கிடந்த சீனரும், இன்று மூலையில் இல்லை, முன்னோர்வழி என்பதற்காக முரட்டுப்பிடிவாதமாக இருட்டு மனப்பான்மையைக் கொண்டு ஏமாளிகளாக இல்லை. அவர்கள் விழித்துக் கொண்டனர். அதுமட்டுமோ! நம்மை விழிக்கச்செய்கின்றனர்.

சோர்ந்துகிடந்த சீனா நிமிர்ந்து நின்றதற்கு, சோம்பிக்கிடந்த சீனா சுறுசுறுப்பு பெற்றதற்கு, வைதிகத்தால் வதைக்கப்பட்ட சீனா புதுவாழ்வின் கருத்தை உணர்ந்ததற்கு, பழமையில் நெளிந்த சீனா புது

(9ம் பக்கம் பார்க்க)

# பிரசங்க மேடை!

## குடந்தையில் சர். கே. வி. ரெட்டி சொற்பொழிவு.

நோயாளிக்கு எது தேவை, மருந்தா, விருந்தா? பசிக்கொடுமையால் துடிப்பவனுக்கு சோறு தேவையா, சேறுபோன்ற சந்தனப்பூச்சு தேவையா? பகலில் விளக்கு ஏன்? எதெது எந்தந்தச் சமயத்துக்குத் தேவை என்பது கொடுப்பவருக்குத் தெரியவேண்டும், எந்தச் சமயத்தில் எதைக்கேட்பது என்பது வாங்கிக்கொள்வோருக்குந்தெரியவேண்டும். காலத்துக்கும் நிலைமைக்கும் தேவையானதைத் தேடுவதே அறிவுடைமை. மடமை, வேறு யோசனைகளைத்தாரும்.

மலேயா போய், சிங்கப்பூர் சிதைந்து, ஜாவாவைத் தவித்துக்கொண்டு, பர்மா பதைத்துக்கொண்டு இருக்கும் இந்த நேரத்தில், இந்தியாவுக்கு எது தேவை? ஆச்சாரியார் சுயராஜ்யம் தேவை என்கிறார். சர். கே. வி. ரெட்டி அவர்கள், பிப்ரவரி 27ந்தேதி கும்பகோணத்தில், தெ. இ. ந. உ. சங்கத்தாரால் வரவேற்கப்பட்டபோது சொற்பொழிவாற்றுகையில், நாட்டுக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தநேரத்தில், சுயராஜ்யம் கொடு என்று கேட்பது சவுண்டிகள் சுபாவம் என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்புக்காக, படைபலத்தைப் பெருக்குங்கள், படைத்தலைவர்களைப் பெருக்குங்கள், பீரங்கிகள் அதிகமாகத் தாருங்கள், டாங்கிப்படை, விமானஎதிர்ப்புபீரங்கிகள் முதலிய ஆயுதங்களை அதிகமாக அளியுங்கள், நாட்டைஎதிரிசிதைக்காமல், பாதுகாப்புதாருங்கள் என்று பிரிட்டிஷாரை வற்புறுத்தவேண்டிய வேளை இது. பிரிட்டிஷார், இந்தியாவை எதிரிபிடிக்கா திருக்க என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளத்துடிக்க வேண்டியநேரம். இதைக்கேட்பதைவிட்டு, சுயராஜ்யம் கொடுஎன்று கேட்பது, உப்புக்கு உதவுமா? என்று சர். கே. வி. கேட்கிறார். எப்படியாகிலும் இந்தியா காப்பாற்றப் படும் என்று சர்ச்சில் நமக்கு உறுதிமொழி அளிக்க வேண்டும்என்று நான் வற்புறுத்திக் கேட்கிறேன். இறுதியில் நேசநாடுகளே வெற்றிபெறும் என்று பிரிட்டிஷ் பிரமுகர்கள் கூறி விட்டால் போதாது. இறுதி வெற்றி ஏற்படுவதற்குள் இந்தியா ஜப்பானிடம் சிக்கிஅவதிக்கு ஆளாகவேண்டுமா? அதைச்சகிக்க முடியுமா? பிரிட்டிஷ் முதல்மைச்சர் சர்ச்சில், பார்லிமெண்டில், அடுத்தாற்போல் பேசும்போது, ஜப்பானிய ஆபத்தினின்றும் இந்தியாவைப்பாதுகாக்க பிரிட்டிஷார் என்ன ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கின்றனர், என்னசெய்யப்போகின்றனர் என்பதைத்தெளிவு படுத்தவேண்டும், என்று தலைவர் ரெட்டிநாயுடு முழக்கம் புரிந்தார். நாட்டுக்கு ஆபத்து சூழ்ந்தவேளையில், பிரிட்டிஷாரை இந்தியநாட்டுத் தலைவர்கள் கேட்க வேண்டியது இதுவல்லவா! சுவரைவைத்துக் கொண்டு தானே சித்திரம் எழுத முடியும்! நாடு, எதிரியிடம் பிடிபடாதபடி பாதுகாப்பு முதலில் ஏற்பட்டால்தானே சுயராஜ்யம். அதிலே சுயராஜ்யம் கிடைத்துவிட்டது என்றபேச்சும், வீட்டிலே ஜப்பானியக் குண்டுவீச்சு மாக இருந்தால் என்னபயன்? இந்த முக்கியமான உண்மையை சர். கே. வி. ரெட்டி அவர்கள் எடுத்துரைத்த பிறகாவது, காங்கிரஸ் தலைவர்கள், காலத்தைக்கருதியும் கொண்டு, கவைக்குதவும் வேலையில் ஈடுபடவேண்டும்.

"சுயராஜ்யம், சர். கே. வி. ரெட்டியாருக்குத் தேவையில்லை ஆகவேதான் அவர் அவ்விதம்பேசினர்" என்று சவுண்டிகள் கூறுவர். சர். கே. வி. அதை உணர்ந்து, முன்கூட்டியே அவர்களின் வாய்க்குப் பூட்டிடும் வகையில் விளக்க முறைத்துள்ளார்.

"நான் சுதந்திரத்தில் வேட்கை கொண்டவனல்லவென்று தவறானகருத்தைக் கொள்ளாதீர். சுதந்திரம் நமது பிறப்புரிமை, அதை நாம் பெற்றேதீருவோம். ஆனால் சுதந்திரம் தந்துவிட்டதாக செய்தி கிடைத்ததும், இந்தியா, வீறுகொண்டெழுந்து போரில் கலந்து எதிரியை விரட்டிவிடும் என்று வாதம் புரிகிறார்களே, அது அபத்தப்பேச்சு என்பதைஉணர்ந்தே, இப்போது நாம் பிரிட்டனிடம் கேட்கவேண்டியது பாதுகாப்பு, என்று கூறுகிறேன்.

இரண்டு குதர்க்கமான கருத்துகள் மக்கள் மனதிலே புகுத்தப்பட்டுள்ளன. ஒன்று, காங்கிரசார் கோருகிறபடி, சுதந்திரம் தந்துவிட்டால், போர் ஆதரவு மலைபோல் குவியும் என்பது. இது ஒரு அலங்காரப்பேச்சுதான். யுத்தஆதரவு எந்த அளவுக்குக்காட்ட முடியுமோ அந்த அளவு நாம் செய்திருக்கிறோம். அதிகம் செய்ய இயலாது. காங்கிரஸ் கூட்டம் பூராவும், யுத்த ஆதரவு தேடுவதில் ஈடுபட்டாலும், இப்போது செய்திருப்பதைவிட பிரமாதமாக வேறுசெய்ய முடியாது. காங்கிரஸ்காரர்கள், கொண்டுள்ள இலட்சியங்களும் கொள்கைகளும், பிரிட்டனிடம் காட்டும் குரோதமும், அவர்களை போர் ஆதரவாளர்களாக்காது. கொள்கையோ அஹிம்சை! போர்ப்பழக்கமோ, பலதலைமுறைகளாகக் கிடையாது. இவர்கள் என்ன மகத்தான காரியத்தை, இதுவரைநாம்செய்யாததை இனி செய்துவிடமுடியும். காங்கிரசைத்தட்டிக் கொடுத்தால், போர் ஆதரவு திடீரெனப் பெருகும் என்றுரைப்பது பொருந்தாப்பேச்சு. பிரிட்டனுக்கு, இரண்டொரு தலையங்க அர்ச்சனை நடக்கும்! அவ்வளவுதான்! மற்றொரு மனப்பிராந்தி, காங்கிரசை மட்டும் கருதவேண்டாம் இந்தியர்களுக்குச் சுதந்திரம் தந்துவிடட்டும், அப்போது நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள இந்தியரால் முடியும் என்பதாகும். இதுவும் அறிவுக்குப் பொருந்தாக்கூற்றுதான். நாமோ நிராயுதபாணிகள், கோடி கோடியாக ஆள் இருந்து பலன் என்ன? தேவையான தளவாடங்களும், அவைகளைத் தாங்கும் திறனும், மக்களுக்கு இல்லை. அந்தப்பயிற்சியை உடனே செய்வதும் முடியாது. இன்று நாட்டு மக்கள் உள்ள நிலையில், எதிரியிடமிருந்து தப்ப பிரிட்டன், சீன, அமெரிக்கா ஆகிய நாடுகளின் துணையை, தயவை, நாடவேண்டி இருக்கிறது. இந்த நிலைமை, சுதந்திரங்கொடுத்துவிட்டால், நொடியில்மாறும் என்று பேசுகிறார்களே அது அபத்தக் களஞ்சியம், என்று ஆணித்தரமாக சர். கே. வி. ரெட்டியார் பேசியுள்ளார். சுயராஜ்யசூரர்கள், யோசித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

நமது கட்சியைப்பற்றி சர். கே. வி. ரெட்டி அவர்கள் பேசுகையில், தேர்தல் தோல்விகளைக்கண்டு மனமுடையத் தேவையில்லை என்பதை விளக்கிவிட்டு, ஜஸ்டிஸ் கட்சிக்கு நேர்த்தியான தலைவர் பெரியார்

(8ம் பக்கம் பார்க்க)

## வாழ்க சீனு!

(பத்தாம் பக்கத்தொடர்ச்சி)

மாக நின்று எதிரியைத்தாக்குவதைக் காணீர். இந்தியாவிலும் இந்நிலை ஏற்படவேண்டாமா? என்று கேட்கப்படுகிறது! சீனுவிலும், இந்தியாவில் இருப்பது போல், பலஇனம், பலஜாதி, அதிலே ஒருஜாதி உயர்ந்தது என்ற ஆணவத் திட்டம் இருந்திருக்குமானல், சீனு சிதைந்துபோய், செல்லறித்துப் போயிருக்கும். அங்கு சமுதாயத்திலே சமத்துவம் இருக்கிறதால்தான் வேற்றுமைகள் கொள்கைகாரணமாகக் கிளம்பியபோதிலும், நெருக்கடியின்போது ஒன்றுகூடி வேலை செய்ய முடிகிறது. கன்சர்வெடிவ் கட்சியினரான மிஸ்டர் சர்ச்சிலும், சமதர்மியான சர் கிரிப்சும், சேரக்காண்கிறோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் சோவியத் குடியரசும் கை குலுக்கக் காண்கிறோம். கொள்கை, கூட்டுறவைக் கெடுக்க வில்லை. ஆனல் கொள்கை ஒன்ருக இருந்தும் தோழர் ராஜகோபலாச்சாரியாரும், அரிஜன முனிசாமியாரும், சமுதாயத்தில் இந்த 1942 மார்ச்சிலும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தில் உள்ளனர். மாஸ்கோவும் லண்டனும் தழுவிக்கொள்ளலாம்! அக்கிரகாரமும் சேரியும், ஆயிரம் தேசிய மகாத்மாக்கள், பேசினலும் ஒன்றை ஒன்று தழுவமுடியாது. ஆகவே சீனுவின் சித்திரத்தைப்பார்த்து, சிந்தை தெளியும் அறிவாளிகள், இங்கு சமுதாய சமத்துவத்தை நிலை நாட்ட முற்படவேண்டும். இங்கு ஒரு சன்-யாட்-சென் ஜில்லாதோறும், ஊர்தோறும் தோன்றவேண்டும்.

சமுதாய சமத்துவம் ஏற்பட்டுவிட்டதனல், சீன மக்கள் சுயமரியாதை பெற்றுவிட்டனர். சுயமரியாதை வீரர்கள் சூருவளிக்கு ஏன் அஞ்சப்போகிருர்கள்! இதோ பாருங்கள், அந்த வீரச்சீனர் வெஞ்சமரில், தமது பிணங்களால் பாலங்கள் கட்டுவதை! பிரிட்டனையும், அமெரிக்காவையும் எதிர்க்கும் ஜப்பான் ஐந்தாண்டுகளாக, சீனக்களத்தில் திணறுவதை நோக்குங்கள். மார்ஷலின் வீரம்மட்டுமா, சீனமக்களின் வீரம் எப்படி இருக்கிறதென்பதை எண்ணிப்பாருங்கள். அபின் மயக்கத்தால் சுருண்டுகிடந்த மக்கள், இருதயத்தை எதிரியின் வேட்டு பிளக்கும்போதும், கீழே சாய்வதற்குள் ஒரு ஜப்பானியனைக் கொன்றேம் என்ற திருப்தியைப் பெற வேண்டும் என்று போரிடுவதைப் பாருங்கள். உலக வல்லரசுகள் உதாசீனம் செய்தன! சர்வதேச சங்கம் வெட்டிவேதாந்தமடமாயிற்று! பர்மா ரோட்கூட சின்னுட்கள் மூடப்பட்டது! ஆனலும் சீனர் சளைத்தாரில்லை!

சீனர், போரிடுவதன் மர்மத்தை, ஆச்சாரியாரும் அவரது அடியார்களும், விளக்குகையில், சீனுவுக்குச் சுதந்திரமிருக்கிறது, ஆகவேதான், சீனர், உயிரை சுதந்திர பலிபீடத்தில் சமர்ப்பிக்கிருர்கள் என்று கூறுகின்றனர். "இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கட்டும், நான் இந்தியரை சீனரைப்போல் போரிடச் சொல்கிறேன்" என்று, ஆச்சாரியார் அளக்கிருர்.

சுயருஜ்யம் தருவதாகக் கூறிவிட்டால், உடனே சூரத்தனம் வருமென்று கூறுவது, நரம்புமுறுக்கு இழந்தவன் மன்மதக் குளிகைக்கு அலைவது போன்ற கோமாளித்தனமாகும். சுயருஜ்யம், சூரத்தனத்தைத் தருமானல் எங்கே பிரான்சின் சூரத்தனம்? சுயருஜ்யத்தை பன்னெடுநாட்களாக பெற்று வாழ்ந்த நாடல்லவா அது! டென்மார்க், நார்வே, போலந்து, பெல்ஜியம், கிரீஸ், முதலிய எத்தனையோ நாடுகள், சுயருஜ்ய பீடத்திலிருந்து சுவஸ்திக்கொடியோனல் கீழேஉருட்டப்பட்டன. சுயருஜ்யத்தையும் ராணுவத்தையும், நெடுநாட்களாக வைத்துக்கொண்டிருக்கும் அந்த நாடுகளை வார்சேல்ஸ் கூண்டில் தள்ளப்பட்ட ஜெர்மனி அடித்து கீழே விரட்டியதன் மர்மம் என்ன? அந்த நாடுகளை விடவா சூரத்தனம், சுயருஜ்யம் கிடைத்ததும், இந்தியாவுக்கு கிடைக்கும். சொல்ல முடியுமா? சொன்னல் அறிவுள்ளோர் நம்பமுடியுமா? அலங்காரப்பேச்சு அறிவு போதனைக்கு உதவாது ஐயனே! மக்கள் ஒன்று என்ற எண்ணம் வந்தால், ஓர் எழுச்சி ஏற்படும். அந்த எழுச்சியின் முன் அரண்கள் தவிடுபொடி, கோட்டைகள் தூள், கொத்தளங்கள் பாழ்! ஆம், அத்தகைய எழுச்சி இந்தியாவுக்கு வேண்டும்! சீனுவைக்கண்டவர், சியாங்கைக் கண்டவர், சீனுபோல் நமது நாடும் சுதந்திரம் பெறவேண்டும் என்று எண்ணுவது நேர்த்தியானதுதான். ஆனல் சீனச்சமுதாயத்தில் ஜாதிகள் இல்லையே இங்கு ஆயிரம் ஜாதிகள் உண்டே, இதற்கென்னசெய்வது என்று யோசிக்கவேண்டும்.

ஒருநாட்டு மக்களின் விழிப்பும், எழுச்சியும் வீரமும், தியாக புத்தியும், சீனுதினத்தன்று நம்நாட்டு மக்களுக்கு ஏற்படட்டும். சீனரும் இந்தியரும் சேர்ந்து, பிரிட்டன், அமெரிக்கா ரஷியாவுடன் கூட்டுறவுகொண்டு முதலில் பெர்லின் பேயனையும் டோக்கியோ தூர்த்தனையும் துரத்தி விடட்டும். பிறகு, டாக்டர் சன்யாட்சென் உண்டாக்கிய எழுச்சியை உண்டாக்கட்டும்.

சீனரின் வீரப்போரைக்கண்டு, நாம்களிக்கிறோம். பர்மாப்பகுதியில் நமக்காக சீனர்கள் இரத்தம் சிந்துவதைக்கண்டு, நாம், நமது வணக்கத்தைச் சீனருக்குத் தெரிவித்துக் கொள்வோமாக! சீனுவுக்குச்சென்ற புத்த ஒளி, இந்தியாவுக்கு மீண்டும் உண்டாகி, ஜாதிச் சனியனை விரட்டவேண்டும். பயங்கரமான போரின் மத்தியில், பெருமைக்குரிய தோழமை, சீனுவுக்கும் இந்தியாவுக்கு மிடையே உண்டாகிஇருக்கிறது. இந்தத் தோழமை தழைக்குமாக! பீரங்கிவேட்டுக்கும் துப்பாக்கி முனைக்கும் எதிரே, பங்காளிகளாக நிற்கும் சீனுவும் இந்தியாவும், போர்முடிந்து, எதிரிகள் முறியடிக்கப்பட்டு, புதுஉலகம் அமைக்கப்படும்போது, இன்பமும் எழுச்சியும் தாண்டவமாடும் புன்னகைப் பூஞ்சோலையில், சமபங்காளிகளாக வீற்றிருக்கத்தான் போகின்றன.

**வாழ்க சீனர்! வெல்க சீனர்!!**

**வானம்பாடி வெளியீடுகள்.**

பாரதிதாசன் இயற்றிய
**எதிர்பாரா முத்தம் 0-8-0.**

ஈழத்தடிகள் எழுதிய
**பெரிய புராண ஆராய்ச்சி**

முதல் பாகம் 0—6—0.
2-ம் ,, 0—2—6.
3-ம் ,, 0—3—0.

மேற்படி புத்தகங்கள் எம்மிடம் கிடைக்கும்.
தபாற் சிலவு வேறு.

**வானம்பாடி நூற்பதிப்புக் கழகம்.**
51. நிமந்தக்காரத் தெருவு,
சின்ன காஞ்சீபுரம்.

## காஞ்சிநகரச் செய்திகள்.

### விருந்து

காஞ்சீபுரம் சென்ட்ரல் பாங்கிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் S முத்தையய முதலியாருக்கு, காஞ்சீபுரம் தோழர் A. K. தங்கவேலர் பாங்கி கட்டடத்தில் மார்ச்சு மாதம் முதல் தேதி மாலை 4மணிக்கு, ஒரு தேநீர் விருந்து நடத்தினர். உள்ளூர் அதிகாரிகளும் பிரமுகர்களும் வந்திருந்தினர் மாலையில் பொதுக்கூட்டம் ஆடிசன்பேட்டையில் நடைபெற்றது

### M. S. இசை விருந்து

காஞ்சீபுரம் சங்கீத சபையின் ஆதாவின் கீழ் முருகன் டாகீஸில். கோகிலகான M. S. சுப்புலட்சுமியின் இசை விருந்து 1—3—42 மாலை 5 மணிக்கு நடைபெற்றது

### யுத்த ஆதரவு

2—3—42 மாலை 6மணிக்கு பெரியகாஞ்சீபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள மைதானத்தில் யுத்த ஆதரவுக் கூட்டம் தோழர் A பாலகிருஷ்ண முதலியார் தலைமையில் நடைபெற்றது. தோழர் கலியாண சுந்தரன், போர் நிலை பற்றி சொற்பொழி வாற்றினர்.

### சினிமா

காஞ்சிபுரம் கண்ணன் டாகீஸில் "சபாபதி" என்ற தமிழ் படம் ஓடுகிறது. முருகன் டாகீஸில் "மாயாஜோதி" நடைபெறுகிறது.

### நாடகம்.

சுந்தரேச மதுரைஒரிஜனல் பாய்ஸ்கம்பெனியார், காஞ்சீபுரம் காமாட்சி தியேட்டரில், "இலட்சுமீகாந்தன்" என்றதுப் பறியும் நாடகத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

### சாரணர்விழா

பச்சையப்பன் பள்ளிசாரணர் படைக்கு விருதளிக்கும் விழா 4—3—42 மாலை தோழர் K. வெஙகிட்சாமிநாயுடு M. L. C. தலைமையில் நடைபெற்றது.

### சீன தினம்

7—3—42 மாலை காஞ்சீபுரம் தாலுக்கா யுத்த பிரசார கழகத்தின் ஆதரவில் சீன தினம் விமரிசையாக நடைபெற்றது.

## போர் முனையில்

### இந்த வாரம்

ரங்கூனுக்கு ஆபத்து அதிகரித்து விட்டது.

ஜவாவின் நிலை மோசமாகிறது.

பிலிப்பைனில் போர் நடக்கிறது.

ரஷியர் எங்கும் வெற்றி அடைந்து வருகின்றனர்.

அமெரிக்கப்படை லண்டன் வந்திருக்கிறது

லிபியா போர் நடந்துவருகிறது.

பாரிஸ் நகரை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின.

மாஸ்கோவை ஜெர்மன் விமானம் நேற்று தாக்கிற்று. இரண்டுமாதமாகத் தாக்கினதில்லை

### ... அந்தோ மறைந்தாரே! ...

நமது இயக்கத்தோழர், திருச்சி "சுந்தர நாடார்" அவர்கள் திடீரென்று காலமானது கேட்டு நெஞ்சம் திடுக்கிட்டு, நிலைதடுமாறிக் குழம்புகிறோம். திருச்சியில் இவ்வாண்டும் சென்ற ஆண்டு சோமரசன் பேட்டையிலும் ஜில்லா ஜஸ்டிஸ் மாநாடுகளைக் கூட்டிவித்து. இயக்கத்திற்கு அவர் ஆற்றிய அரும்பணியையும், மலர்ந்த முகத்துடன் தோழர்களை வரவேற்று உபசரித்ததையும், இயக்கத்தில் அவர்காட்டிய ஆர்வத்தையும் எண்ணும் போது. அவரது மறைவு எவ்வளவு பெரிய நஷ்டம் என்பது தெறிவதோடு நெஞ்சு வேகிறது துக்கத்தால். என்னே நமது நிலை! தமிழரின் புதுவாழ்வைச் சித்தரிக்க முற்படும் தளபதிகள் இதுபோது மிகச்சிலர். அவர்களில் ஒருவராக இருந்து நம்மை ஊக்குவித்துவந்த தோழர் சுந்தரநாடார் மறைந்தார்! திருச்சி திடுக்கிட்டது தமிழர் தத்தளித்தனர் என்செய்வது. தமிழர் இதுபோன்ற பெருநஷ்டங்களையும் பொறுத்துக்கொள்வதன் மூலமாகவே நெஞ்சுறுதிபெற வேண்டியிருக்கிறது போலும். கட்சித்துறையில் நமக்கோர், வழிகாட்டியாக இருந்த தோழரை இழந்தோம். துயரம் எழுதுகோலைத் தூக்கியடிக்கிறது. மனமே உறுதிபெறு! துயரத்தைத் துடைத்துக்கொள்! என்று கூறுவது தவிர வேறென்ன செய்வது.

மறைந்த சுந்தரனாரின் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். மறைந்தவரின் புகழ் மங்காதிருக்க, திருச்சிதோழர்கள் அவர் நடத்தி வந்த நற்பணியைத் தொடர்ந்து நடத்திவருவர் என்றுநம்புகிறோம். அவரது நினைவுக்காகவும் திருச்சி இயக்கத் தோழர்கள் தக்கது செய்வர் என்று நம்புகிறோம்.

## இன்று சீனாவில்

இன்று 8—3—42ல், சீனாவில், சுங்கிங் நகரில், தோழியர் சியாங்-கே-ஷேக் தலைமையில், சர்வதேச ஸ்திரிகள் தினம் நடைபெறுகிறது.

## இன்று ரஷியாவில்

தாய்மார்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

ரஷிய வீரரமணிகளைப்பற்றி பிராவ்தா "இந்த யுத்தத்தில் மாதர்கள் சிறப்பான வேலை செய்கின்றனர். ஆண்கள் மட்டுமே செய்யக்கூடியது என்று எந்தவேலையுமில்லை. ரஷிய மாதரும் போரிடுகின்றனர். ரயில் வண்டி யோட்டுகின்றனர். யந்திரத்தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். ரஷிய மாதர்கள் ஹிட்லரின் ஆதிக்கத்தில் அடிமை வாழ்வு வாழமாட்டார்கள்" என்று எழுதுகிறது.

---

8ம் பக்கத் தொடர்ச்சி

"பாகிஸ்தான் ஏற்கப்படாவிட்டால், நாட்டிலே என்றுங்காணாத புரட்சி ஏற்படும் என்று ஜனாப் ஜின்னா பயமுறுத்துகிறார். அதற்கு நாங்கள் தயார்தான். இதற்குமுன் இன்னும் பலமான புரட்சியையும் நாங்கள் சமாளித்திருக்கிறோம்" என்று சவர்க்கார் சல்லடம்கட்டுகிறார்! சமாளித்தார்களாம்! அக்பரும் அவுரங்கசீபும், ஆண்ட சரிதம் அழிந்தாவிட்டது. அந்தக்காலத்தில் கட்டிய தாஜ்மஹால் மறைந்தாவிட்டது. ஆறுநூற்றாண்டுகளுக்கு மேலாக, ஆரியவர்த்தம், இஸ்லாமியரின் அடிவருடிக்கொண்டிருந்ததை, சரிதம் கூறுகிறது. சவர்க்கார் அதை உணரட்டும், பிறகு உரையாட முன்வரட்டும்!

### — ஜஸ்டிஸ் மாநாடுகள் —

*மாகாண ஜஸ்டிஸ் வாலியர் மாநாடு சென்னையில் மார்ச் 15ந் தேதி. திருச்சி தோழர் K. A. P. விஸ்வநாதன் தலைமையில் நடைபெற இருக்கிறது.*

*குளித்தலை தாலுக்கா ஜஸ்டிஸ் மாநாடு மார்ச்சுமாதம் மூன்றும் வாரத்தில், குளித்தலையில் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. விவரம் பிறகு.*

*செங்கற்பட்டு ஜில்லா ஜஸ்டிஸ் மாநாட்டை, திருக்கழுக்குன்றத்தில் மார்ச்சு மாத முடிவுக்குள் நடத்த திருஒற்றியூர் தோழர் T. ஷண்முகம் பிள்ளை அவர்களும், காஞ்சீபுரம் தோழர் A. K. தங்கவேலரும் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.*

*வடாற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் மாநாட்டை, ஆரணி வட்டாரத்தில் நடத்த, ஆரணியிலுள்ள ஜஸ்டிஸ் தோழர்கள் முயற்சிசெய்து வருகின்றனர்.*


# "திராவிட நாடு"

ஞாயிறு] 8—3—42 [காஞ்சி.


# கொந்தளிப்பில்!

—x—

"காற்றடிக்குது கடல் குமுறுது" கப்பலும் பிரயாணத்தைத்தொடங்கி விட்டது. இருண்டவானம், சுருண்டு எழும் அலைகள் மை இருட்டு, ஆனாலும் பிரயாணம் நடந்தே தீரவேண்டும். கொந்தளிப்பிலும் கப்பல் சென்று தானாகவேண்டும். கடமை அழைக்கும்போது காலத்தினால் விளையுங் கஷ்டத்தைச் சாக்காகக் கூறித்தப்பித்துக் கொள்வது மன்னிக்க முடியாத குற்றமாகும். எனவே கொந்தளிப்புமிக்க இவ்வேளையில் 'திராவிட நாடு' வெளியிடுவதற்காக, நாம் மன்னிப்புக் கோரவில்லை. மாறாக, நெருக்கடியான நேரத்தில், 'திராவிடநாடு' தமிழருக்குப் பணியாற்றப் புறப்படுவதற்காக தமிழர், அமைதியும் ஆனந்தமும் குடிகொண்ட காலத்தில் ஆதரிக்கும் அளவைவிடசற்று அதிகமாகத்தமது ஆதரவை, திராவிடநாட்டுக்கு, காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

உலகெங்கும் போர்! நகரமெங்கணும் இருட்டு! பாதைகளிலெல்லாம் பதைபதைத்த உள்ளத்தோடு செல்லும் மக்கள். கடல் கடந்து சென்றிருந்த தமிழரின் துயரம் ஒருபுறம், இங்கேயே எதிரியின் வேட்டுகள் எந்த நேரத்திலும் பாய்ந்து வரக்கூடுமே என்ற திகில்மற்றோர்புறம், உயிர், உடைமை, உரிமை யாவற்றினுக்கும் ஆபத்துநேரிடுமோ என்ற அச்சம் பிறிதோர் புறமுமாக இருந்து கொண்டு நமது தோழர்களின் நெஞ்சைக் குழப்பிக்கொண்டுள்ள இந்தநேரத்தில், "திராவிடநாடு" வெளிவருகிறது.

ஒருபுறம், ஜெர்மன் பட்டாளமும், மற்றோர்புறம் ஜாரின் பாதகப்படையும், ஒரு பக்கம் குட்டிக் குபேரர்களின் கொட்டுதலும் மற்றோர்புறம் ரஸ்புட்டீன் வஞ்சகத்தர்ன் வஞ்சகமும், ரஷிய நாட்டைத் தாக்கின சமயத்தில், இருண்ட அந்த நேரத்தில், இடரும் இடியும் மிகுந்தகாலத்தில், கொந்தளிப்பும் குழப்பமும் கூத்தாடிய வேளையில், சமதர்ம ஒளிதோன்றி, சகல ரோக நிவாரணியாக விளங்கி, ரஷியநாட்டில், சோவியத் ஆட்சி எனும் சோபிதத்தைத்தந்தது. திராவிட நாட்டிலும், இந்தப் பேராபத்தும் கொந்தளிக்கும் நிலையும் இன்று இருப்பினும், இருண்ட வேளைமாறி, கிழக்குவெளுக்கும்போது திராவிடரின் விடுதலையும் கிடைக்கும் என்று எண்ண இடமிருக்கிறது. நெருக்கடிக்குப் பிறகு நேர்வழி ஒன்று கிடைக்கப் போகிறது. அது திராவிடரை ஆரிய அடிமைத்தனம், ஆங்கிலேய ஏகாதிபத்தியப் பிடிப்பு ஆகியவைகளினின்றும் விடுவித்து, உரிமைக் கனிரசத்தைப் பருகி உல்லாச வாழ்வு வாழும் உத்தமர்களாக்கப்போகிறது.

புகைசூழ்ந்த பூமண்டலத்தில், போர் தீர்ந்து, சமாதானம் நிலவும்போது, சமதர்ம வாடைவீசாத இடமே இருக்கப்போவதில்லை. ஒவ்வோர் நாட்டிலும், அரசியல் மதம், சமுதாயம் ஆகிய துறைகளில் மதோன்மத்தர்களாக, மமதையின் பிம்பங்களாக, ஜார்களாக கொலுவீற்றிருக்கும் கொடுமைகளும் பேதங்களும், சாய்ந்து சரிந்து தொலையத்தான் போகின்றன.

சிகப்புப் பட்டாளமும், சீனமக்களும், பிரிட்டிஷ் படையும், அமெரிக்க ஆணழகர்களும், தமிழரும் பிறரும், இன்று சிந்தும் இரத்தம் வீண் போகுமென்று நாம் கருதவில்லை. கடமையின் பாற் பட்ட கருமம் பலன் தந்தேதீரும். போருக்குப்பிறகு, புது உலகம் ஏற்படத்தான் போகிறது. அதிலே திராவிடரின் இடம் எது? ~~மற்றமக்கள், கொடுங்கோன்மையினின்றும் விடுபட்டு, சுதந்திர மக்களாய் வாழப்போகும் வேளையில், திராவிடர், பண்டை நாட்களில்பாரோர் புகழ வாழ்ந்து.~~ இடைக்காலத்தில் ஆரிய வஞ்சனையால் வீழ்ந்து, இன்று ஓரளவு புத்துணர்ச்சி பெற்றுள்ள திராவிடர், மூவேந்தர், முச்சங்கம், முத்துமணி பவளம் எனத் தக்க ஜொலிப்புடன் கூடிய இலக்கியங்கள், நீர்வளநிலவள குடிவளம் ஆகியவெல்லாம் பெற்று, ஆனந்தமாக வாழ்ந்த திராவிடர், கங்கைக்கரையில் உலவிய கசடரின் கட்டுக் கதைகளைக் காதுகளில் புகுத்திக் கொள்ள மறுத்து, கற்பனைகளை, அவைகள் எவ்வளவு அலங்காரத்தோடு வெளிவரினும் ஏற்கமறுத்து, பகுத்தறிவாளராய், தோழர்களாய் வாழ்ந்து வந்த தமிழர், கடல் அலைகளை அடக்கி மரக்கலங்களைச் செலுத்தி, மலைக் கோட்டைகளை அமைத்து அழகு நகர்கள்

சமைத்து அரசோச்சி அகங்குளிர்ந்து வாழ்ந்து வந்த திராவிடர், இன்று அடிமைகளாய், வறுமை, பிணி, பஞ்சம் பஞ்சாங்கம், ஆரியம் எனும் பல்வேறு தொல்லைகளைத் தாங்கும் சுமைத்தாங்கிகளாய் செத்தவாழ்வு வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலைமைமாற வேண்டாமா? சொந்தநாட்டில் சூதுக்காரருக்கு சூத்திரராக இருக்கும் கேவலம் துடைக்கப்படவேண்டாமா? அட்லாண்டிக் சாசனம், நமக்கு உண்டா இல்லையா? என்று எவரெவரோ கேட்கும் இந்தக் காலத்தில் ஆரியர் வகுத்த அடிமை முறிச்சீட்டில நமது மூதாதையர் பொறித்துள்ள கையொப்பம் கலைக்கப்படவேண்டாமா? நம்மை வாட்டி வதைக்கும் வர்ணாஸ்ரம வர்செல்லவ ஒப்பந்தத்தைநாம் சுக்குநூறாகக்கிழித்தெறிய வேண்டாமா? திராவிடருக்கு விடுதலை கிடைக்க வேண்டாமா என்று கேட்கிறோம். கொந்தளிப்பினிடையே, கூர்ந்து நோக்குவோருக்கு, இதனுண்மை புலனாகாமற்போகாது. மேனாடுகளில், பலநாடுகள் ஜெர்மன் பிடியிலிருந்து விடுதலைபெற, தமதுமக்களை மரண மண்டலம்வரை பிரயாணம்செய்யக் கட்டளையிடுகிறது. தாய்நாட்டின் கட்டளையைத் தலைமேல்தாங்கி பற்பல நாட்டுப் போர்வீரர்கள், இரத்தம் சிந்துகின்றனர்! திராவிடருக்கோ, அரசியலில் மட்டுமா மாறுதல் தேவை! சமுதாயமே புத்துணர்ச்சிபெற்றதாகமாறவேண்டும். மனத்தளைகள் அறுபடவேண்டும். மதக்கிறுக்கரின் மமதை மடியவேண்டும், ~~சனாதனம்பேசி நமது புராதனப் பெருமையை நசுக்கிய சழக்கரின் ஆட்சிக்கு முடிவு ஏற்படவேண்டும்~~. திராவிடர், இனஎழுச்சி நாட்டுப் பற்று கொண்ட வராய்த் திகழ்தல் வேண்டும்.

காங்கிரஸ் தோழர்கள் கூறுவதுபோல் சுயராச்சியம் கிடைத்து விட்டாலும், நமது போர் தீர்ந்து விட்டதாகாது. போரின் போக்கும் முறுக்கும்பலப்பட்டது என்றே ஏற்படும். சுயராச்சியம் கிடைத்து விட்டால் காங்கிரஸ் கலைக்கப்பட்டுவிடும் என்றுபிரபல காங்கிரஸ் தலைவர்கள், கூறுகின்றனர். சுகராச்சியம் ஏற்படும்வரை திராவிடச் சங்கத்திற்கு வேலை இருக்கிறது. ஆங்கிலேயரின் ஆசிகிடைத்ததும் காங்கிரசின் காரியம் முடிந்து விட்டதாக அவர்கள் கருதலாம். ஆரியம் அழிக்கப்படும்வரை, திராவிடப் படைக்கு வேலை இருக்கிறது.

அத்தகைய திராவிடப்பட்டாளத்துக்கு ஆள் சேர்க்கும் பணியை நாம் நம்மாலான மட்டும் செய்யவே வெளிவருகிறோம். திராவிடரின் எழுச்சிக்குரலாக இருக்கவேண்டுமென்பதே நமது ஆவல். திராவிடரின் பாசறையில் நாயோர் ஆயுதமாக இருக்க அவாவுகிறோம். திராவிடருக்கு நாட்தாள் வாரத்தாள், மாதமலர், என்றுபலப்பல தேவை என்பதை எவரேமறுக்க முடியும்! மலர்கள் பலபூத்தின, மங்கினவே என்று கூறப்படும். மங்கினதில் ஆச்சரியமில்லை. பூத்ததில் ஆச்சரியமுறுகிறோம். ஏன்? சுயமரியாதையை இழந்து சோர்ந்து கிடந்த சமுதாயத்தில், புரட்சிக்காக புதுமைக்காகப் போரிடும் பத்திரிகைகளதோன்றுதபடி பார்த்துக்கொள்வதில் ஆரியர் கண்ணுங்கருத்துமாகவே உள்ளனர். தோன்றும் தாள்களை, அடக்கவும் அழிக்கவும் அவர்கள் முற்படாதிருப்பதில்லை. இவைகள் தெரிந்தும், ஆரியரின் போர் முறைகள் இதுவெனத் தெரிந்தும், "திராவிடநாடு" தமிழரின் ஆதரவு கிடைக்கும், அந்தக் கேடயத்தைக் கொண்டு ஆரிய அஸ்திரங்களைத் தடுத்துக்கொள்ள முடியும் என்று துணிந்து இன்று, திராவிடநாட்டில் வெளிவந்திருக்கிறது.

திராவிடரின் விடுதலைக்காகப் பாடுபடுவதே நமது நோக்கம். இந்தப்பணியை ஆற்றி வரும் பெரியாரிடம் பெற்ற பயிற்சியைத் துணையாகக் கொண்டு, கடமையைச் செய்ய வேண்டிய போது கலகங்கூடாது என்ற உண்மையையும் உறுதுணையாகக் கொண்டு, உமது ஆதரவைநாடி, 'திராவிடநாடு' வெளிவருகிறது. ~~திராவிடர், திராவிட நாட்டை ஆதரிக்க வேண்டுமென்பது, வற்புறுத்திக் கூறவேண்டியதல்லவே!~~

திராவிடருக்காகப் பணியாற்றும் நாம் அச்சம் தயை தாட்சண்யமின்றி புரட்டுகளை வெளிப்படுத்துவோம், புல்லர்களைப் போசுக்குவோம், புதுமைக்காகப் போராடுவோம். நமது கடமையைச் செய்கையில் எத்தகைய எதிர்ப்புத் தடுக்கினும், தடுமாறும் உள்ளங் கொள்ளோம் ஆம்!

" துன்புறும் எளியோர் துயரது தீர்ந்து
இன்புறும் வண்ணம் உண்மை இயம்ப
அஞ்சுவோன் வீரன் ஆகான்: மற்றும்
உற்றதுரைத்தலால் ஊறும் பழியும்
மற்றும் பல்லின்னல் வந்திடு மென்று
மெய்மையைக் காக்கும் விரதம் விடுத்து
பொய்யுரைப் போரை புவிதனி லென்றும்
அடிமை யென்றே அறைந்திடுவோமே"

"திராவிடநாடு" இந்தநோக்கங்களுடன் வெளிவருகிறது. கொந்தளிப்பில் பிறக்கும் திராவிடநாடு, உமது ஆதரவால் வளர்ந்து, திராவிடரின் தோழனாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். எதோ, தோழர்களே, எங்கே பார்ப்போம் உமது அன்பை, கைகொடுங்கள்!!


## ஏஜண்டுகள் தேவை.

"திராவிட நாடு" வாரப்பத்திரிகைக்கு அனுபவமும் சுறுசுறுப்புமுள்ள டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**"திராவிட நாடு ஆபீஸ்"**

51, நிமந்தக்காரத் தெரு, சின்னகாஞ்சிபுரம்.

### பிரசங்க மேடை.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஈ. வே. இராமசாமி அவர்கள் இருக்கிறார். ஆனால் உழைப்பு பூராவும் அவரே செய்யவேண்டும் என்றிருப்பது கூடாது. கட்சிப்பணியாற்றும் தொண்டர்கள் முன்வர வேண்டும் என்று கூறினார். உண்மையானபேச்சு! சர். கே. வி. ரெட்டி அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் கலந்து வேலைசெய்ய ஆரம்பித்தால், பெரியாருக்கும் கட்சியினருக்கும் பூரிப்பு உண்டாகும். முக்கியமாக, ஆந்திரநாட்டிலே சர். கே. வி. ரெட்டியார் அரும்பணியாற்றமுடியும். கும்பகோணத்தில் அவர் கூறியபடி, நேர்த்தியான தலைவரைப்பெற்றுள்ள இந்த நேரத்தில்தான் கட்சியின் வளர்ச்சியை வெற்றிகரமாகச் செய்யமுடியும். சர். கே. வி. ரெட்டி அவர்கள் அதற்காவன செய்ய முன்வரவேண்டுகிறோம்.

## அடிப்பியோ … … சிங்கண்டா!

ஆத்திரத்திலே ஆரம்பித்து அழுகுரலிலேமுடிக்கும் "அடிப்பியோ, உங்க அப்பன்மவனே, சிங்கண்டா…" என்று துரைராஜ், சகுந்தலையில், N. S. கிருஷ்ணனிடம் அடிப்பட்டுக்கொண்டே கதறுவதைக் கேட்காத காது ஏது! கையாலாகாதவனுக்கு பேச்சிலே காரம் இருந்து என்ன பலன்? அதுதான் அந்த காமிக் எடுத்துக்காட்டும் கருத்து. ஹாஸ்யப்படத்தை இடையே இழுத்ததன் காரணம், அரசியல் மேடையிலே, இதைப்போல ஒருவர் ஓங்காரக்கூச்சலிட்டதாகத் தெரியவந்ததாலாகும். அடிபட்டுக்கொண்டு அழுகிற சிங்கம், அரசியலில் ஒன்று உண்டென்றால், அது சவர்க்கார்தான்! அங்ஙனம் கூறக்காரணம் உண்டு. காரமாகப் பேசுவார், கையால் ஒன்றும் ஆவதில்லை. இந்துமகா சபைக்கு அவர் தலைவர், ஆனால் அவருடைய சண்டமாருதப்பேச்சு, இந்து சமுதாயத்தைச் சீர்படுத்தினதாக சந்திரஹரியும் கூறமுடியாது! முஸ்லீம் தலைவரை, முடுக்காகத்திட்டுவது, வீரமான செயல் என்று சவர்க்கார் கருதுகிறார். அதுமோசமான மனப்பான்மை. பாகிஸ்தான் ஒரு பகற்கனவாம்! லட்சுமணபுரியில், தோழர் சவர்க்கார் மார்ச்சுமாதம் முதல்தேதி பேசுகையில், ஜனாப் ஜின்னா பகற்கனவு காண்பதாகக் கேலி செய்திருக்கிறார். ஜனாப் ஜின்னாவின் பாகிஸ்தான், பகல் இரவு எந்நேரமும், சவர்க்காரின் மூளையைச் சுழலவைத்துக்கொண்டிருக்கிறது. பாகிஸ்தான் ஒரு பகற்கனவானால், இந்துமகாசபையின் கம்பீரத்தலைவர் (!) அதுபற்றி ஏன், ஊரூராகச்சுற்றிச்சுற்றி எதிர்க்கிறார். பகற்கனவு போன்றது பாகிஸ்தான் என்றால், பவனி வருவது ஏன்? படை திரட்டுவதாக பூச்சாண்டி காட்டுவானேன். ஏன் சவர்க்காரின் நினைவு பூராவும் அந்த "பகற்கனவின்" பேரிலேயே இருக்கிறது. "பகற்கனவுக்கே" இவ்வளவு பதைப்பு சவர்க்காருக்கு ஏற்படுகிறதென்றால், நிஜநிலையாக மட்டுமல்ல, உருவமாக பாகிஸ்தான் வரும்போது, அவர் என்ன செய்வாரோ, எப்படி இருப்பாரோ என்பதை எண்ணிப்பார்க்கும் போது, பாபம், அவரிடம் பரிதாபமாகத்தான் இருக்கிறது!

**பாகிஸ்தான்** என்றால் என்ன? அதைக்கேட்டு பயங்கொள்வானேன்? பாகிஸ்தான், இஸ்லாமியருக்கு ஒரு இருப்பிடம், தனிநாடு. முஸ்லீமின் தனிநாடாக, இந்திய உப கண்டத்திலே ஒரு இடம் இருப்பதால், யார் குடிமுழுகிவிடும்? இமயம், பாகிஸ்தான் ஏற்பட்டால் நான் இங்குருடியிரேன் என்று கூறுகிறதா? கங்கை வரண்டுவிடுவேன் என்று கதறுகிறதா? ஏனப்பா பாகிஸ்தான் 'என்றதும் பயம் பிடித்து அலையவேண்டும்! அதிலும் இந்துமகா சபைத்தலைவர் சாதாரணப் பேர்வழியா? புரட்சிக்காரர்! வீரசவர்க்காராமே அவர்! ஏன் இப்படி அச்சத்தால், ஆத்திரப்பட்டு அழுகுரலில் பேசவேண்டும்.

முஸ்லீம்களின் நாடாக, அதோ ஆப்கானிஸ்தான் இல்லையா, ஈராக், ஈரான், சிரியா இல்லையா. துருக்கி அரபு இல்லையா, எத்தனையோ முஸ்லீம் நாடுகள் உள்ளன. இங்கு ஒரு பாகிஸ்தான்-பெயரில்கூட முஸ்லீம் வாடை கலக்காமல், இஸ்லாம் ஸ்தான் என்று பெயரிடாமல் 10 கோடி முஸ்லீம்களுக்கு ஒரு பிரதேசம், அவர்கள் பெருவாரியாக உள்ள வட்டாரத்தைத் தனி ஆட்சிக்குத் தரவேண்டுமென்று கேட்டால், அதைக் கேட்டு, தகதகவென ஆடக்காரணம் என்ன? இந்து மதப் புராணத்தின்படி, பாம்புகளுக்குக்கூட ஒரு பிரதேசம் உண்டாம், பெயர் நாகலோகமாம்! பலநூற்றாண்டுகள் இங்கு பாதுஷாக்களாக இருந்து, கலை நாகரிகம், சிற்பம் இலக்கியம், மார்க்கம் ஆகியவற்றைத் தனியாகப்பெற்று வாழ்ந்துவரும் 10-கோடி தோழர்களுக்கு ஒரு ராஜ்யம் தருவது நீதியல்லவா? ஏன் அதைமறுக்கவேண்டும்.

இதோ, சவர்க்காரின் வாதம்! "முஸ்லீம்கள் எங்கெல்லாம் மெஜாரடியாக விருக்கிறார்களோ அங்கெல்லாம் முஸ்லீம் ராஜ்யம் நடப்பதே ஜனநாயக முறை என் ஜனாப் ஜின்னா கூறுகிறார். அது சரிதான்" என்கிறார் சவர்க்கார். பிறகு பாகிஸ்தானை எதிர்ப்பானேன்? கேளுங்கள், குதர்க்கத்தை "ஆனால் சற்றுபரந்தநோக்கங் கொண்டு அவர் இந்தியா பூராவையும் மனதில் வைத்து மற்ற மாகாணங்கள் விஷயத்திலும் அவ்விதக் கொள்கையை அங்கீகரிக்க இணங்கவேண்டும், இந்தியாவில் இந்துக்களே ஜனத்தொகையில் அதிகம். ஆகவே இந்தியா, 'இந்துக்களுடையது என்ற கொள்கையை அவர் ஒப்புக்கொள்ளவேண்டாமா?" என்று கேட்கிறார் சவர்க்கார். இந்தியா பூராவையும் ஒருநாடாகக் கருதிக் கொள்ளச் சொல்வதன்கருத்து, இந்து ராஜ்யத்தை ஏற்படுத்துவதற்காகத்தான். 10கோடி முஸ்லீம்கள், மதம் கலை நாகரிகம் ஆகியவைகளில் வேறான இந்துக்களின் அடிவருடும் அடிமைகளாக வாழ மறுக்கிறார்கள். ஆகவே அவர்கள் பெருவாரியாக உள்ள பிரதேசத்தில் அவர்களுக்கு சுயாட்சிதேவை, என்று ஜனாப் ஜின்னா ஆயிரமாயிரம் தடவை கூறியிருக்கிறார். அதைக்கவனியாமல், கண்டதைக்கூறி சிண்டு முடிவது ஏன்என்று சவர்க்காரைக் கேட்கிறோம்.

"இந்தியா ஒரு தனி நாடல்லவென்றும், அது பற்பல ஜாதியாரும், மதத்தினரும் அடங்கிய கண்டமென்றும் அவர் (ஜின்னா) கூறுகிறார்" என்கிறார் சவர்க்கார். ஆம்! அது உண்மையல்லவா? என்று நாம் கேட்கிறோம். சவர்க்கார் அதை மறுக்க முடியாது, எனவே அவர், குதர்க்கம் பேசுகிறார்.

"பஞ்சாபிலும் வங்காளத்திலும் கூடத்தான் பலஜாதியினரும் மதத்தினரும் இருக்கின்றனர். ஆகவே அவர் கருத்தை இந்த இரண்டு மாகாணங்கள் விஷயத்திலும் அமுலுக்குக் கொண்டுவரக்கூடாதா" என்று கேட்கிறார்! பாரிஸ்டர் சவர்க்காரின் வாதத்திறம் இதுவானால், பாபம், அவர், கோர்ட்டுக்கு போகாதிருந்ததேமேல் என்று கூறுவோம். ஜனாப் ஜின்னாவைக் கேலிசெய்வதாகக் கருதிக்கொண்டு, சவர்க்கார் கூறியவாதம், பாகிஸ்தானுக்குத்தான் பலத்த ஆதரவான வாதமாகிறது. ஜனாப் ஜின்னா "எந்தெந்த பிரதேசத்தில் எந்தெந்த இனம் பெருவாரியாக இருக்கிறதோ, அங்கு அந்த இன ஆட்சி நடக்கவேண்டும்" என்று கூறுகிறார். இதனை வங்காளத்துக்கும் பஞ்சாபுக்கும் ஏற்றுக்கொள்கிறாரா? என்று சவர்க்கார் கேட்கிறார். ஜாம்ஜாமென, மேளதாளத்தோடு ஏற்றுக்கொள்கிறார். இருமாகாணங்களிலும், முஸ்லீம் இனமே மெஜாரடி, எனவே அவை பாகிஸ்தானின் அங்கங்களேயாகும். இனியும் சவர்க்கார் பாகிஸ்தானை எதிர்க்கலாமா? அவரது வாதத்திலேயே அவரது கட்சி வீழ்ந்தும், அவர் சிங்கண்டா……என்றுதான் அழுகிறார், சுபாவம் அப்படி!

(5-ம் பக்கம் பார்க்க)

## வாழ்க சீனா!

2ம் பக்கத் தொடர்ச்சி

மையை அணிந்துகொண்டதற்குக் காரணம், **டாக்டர் சன்-யாட்-சென்.** டாக்டர்சன்-யாட்-சென், கட்டிவைத்த கோட்டையின் காவலன், **மார்ஷல்சியாங்கே-ஷேக்.** புதிய எழுச்சியுடன் கூடிய சீன சமுதாயத்தை சிருஷ்டித்த பெருமை டாக்டர் சன்-யாட்-சென் அவர்களுடையது. அவர்வகுத்துக்கொடுத்த பாதையே சீனாவை இன்று அகில உலகில் ஓர் அந்தஸ்தான இடம் பெறத்தக்க நிலைக்குக் கொண்டுவர இருக்கிறது.

பல நூற்றாண்டுகளாக, பழமையை விட்டு வெளிவர மறுத்ததோடு, புதுமை என்றால், மேனாட்டுமுறை என்றால், எள்ளிநகையாடிவந்த சீனா, புதுஉலகில்எனக்கோர் இடம் தேவை என்று கூறிக்கொண்டு முன்வந்ததைக்கண்டு, மேனாட்டினர் ஆச்சரியமடைந்தனர். ஜார் ஆள, ரஸ்புடீன்ரசிக்க, மக்கள் நசிக்க, ரஷியா ரணகளமாக இருந்தபோது லெனின்கிளம்பி, புதுமையை, புரட்சியை, புத்துயிரைத்தந்து, உலகுக்கோர் "புதுமை உலகை" அமைத்துக் காட்டியதுபோல, ஐரோப்பாவின் நோயாளி என்று கேலிசெய்யப் படுவதைக் கேட்டுக்கொண்டு கேவலமான நிலைமையில் இருந்த துருக்கிக்கு புதுஇரத்த ஓட்டம் உண்டாகும்படிசெய்து வல்லரசுகள் கெஞ்சவும் கொஞ்சவும் போட்டியிட்டுக் கொண்டு முன்வரத்தக்க நிலைக்கு துருக்கியைக் கொண்டுவந்த முஸ்தபா கமால் பாட்சாபோல், சோம்பி, சோர்ந்துகிடந்த சீனாவின் நாடியைப் பிடித்துப் பார்த்து, நல்லதோர் மருந்துமிட்டு, புதுமுறுக்குடன் எழுந்துநிற்கச் செய்தவர் டாக்டர் சன-யாட்-சென். டாக்டர் சன்-யாட்-சென் தந்துபோன செல்வத்தை இன்று சியாங் காப்பாற்றிக் கொண்டு வருகிறார், சில அம்சங்களில் விருத்தியும் செய்திருக்கிறார்.

மக்கள் கட்சியைடாக்டர் **செல், கோமிங்டாங்** என்ற பெயருடன் நிருவி, சீனமக்களிடை கட்டுப்பாட்டையும், சுறுசுறுப்பையும் உண்டாக்கிய டாக்டர் சன்யாட்-சென், **பெகிங் நகரில்,** அரசோச்சிக் கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரரை ஒதுக்கித்தள்ளிவிட்டு 1917ல், **காண்டன்** நகரில் புதுசீன சர்க்கார் நிருவினார். புதுசர்க்கார் நிருவுவது கடினமான காரியமுமல்ல, சரிதப்புகழுக்கு ஆதாரமுமல்ல. டாக்டர் சென், புதுசீனச் சமுதாயத்தை உண்டாக்கினார். மக்களின் மன அழுக்கை தமது அறிவுரையால் களைந்தெறிந்தார். மெய்ஞான போதனையால் வைதீகத்தை விரட்டியடித்தார். **சமுதாயத்தில் சமத்துவ உணர்ச்சியை உண்டாக்கினார்.** சீனர் யாவரும் சமம், உயர்ந்தார் தாழ்ந்தார் இலர், ஜாதி ஆணவம், மதமமதை கூடாது என்று டாக்டர் சீனமக்களுக்கு அறிவுரைபுகட்டினார். சமத்துவம் பூத்தது, சழுக்கர் சாய்ந்தனர், புத்தறிவு பிறந்தது மடத்தனம் மடிந்தது. காட்டைத்திருத்தி நிலமாக்கி, நீரோடையும் உண்டாக்கி பூந்தோட்டம் அமைத்து, நானாவித நறுமலர்கள் தத்தமது மணத்தைப் பரப்பும் வேளையில், சிங்காரத்தோட்டத்தை சிரமம்பாராது சித்தரித்தவன், சித்தம் களித்து நிற்பதுபோல், டாக்டர் சன்-யாட்-சென் தமது முயற்சியினால் புதுசீனச் சமுதாயம் எழுவதுகண்டு, மகிழ்ந்தார். 1925ல் அவர் மறைந்தார். அவர் பெயரோ, மாநிலத்தில் மறையாது.

டாக்டர் சன்-யாட்-சென் இத்தகைய வெற்றி கண்டதற்குக் காரணம், அவர், அதுகாலை ரஷிய நாட்டிலே தோன்றிய சமதர்மத்தைக்கண்டு களித்து, மனமாற வரவேற்றதுடன், சீனாவிலிருந்து ரஷியாவுக்குத் தமது தோழர்களை அனுப்பி, ரஷியப்புரட்சிப் பாடத்தைக் கண்டறியச்செய்ததோடு, ரஷிய புரட்சிவீரர்களை, சீனாவுக்கு வரவழைத்து, அவர்களின் ஆதரவின்கீழ் சீனப்புத்துணர்ச்சி இயக்கத்தை அமைத்ததேயாகும். பிரசாரமுறை, கட்சிஅமைப்புத்திட்டம், ராணுவப் பயிற்சி, முதலியன ரஷியரால், சீனருக்கு போதிக்கப்பட்டது. சீனநாட்டின் சிகப்பு ரோஜாவாக, டாக்டர் சன்-யாட்-சென விளங்கினார். அவர் சீனாவுக்கு தந்த செல்வங்கள் மூன்று, (1) தேசீயம். (2) ஜனநாயகம். (3) சமதர்மம். இன்றுள்ள மார்ஷல் சியாங்கே-ஷேக்- தேசீயத்திருத்தாதர் என்றால் பொருந்தும், ஜனநாயகக் கோட்பாட்டிலே ஆர்வங்கொண்டவர் என்றாலும் பொருந்தும், ஆனால் சன-யாட்-சென் தந்த மூன்றாவதும் மிக முக்கியமானதுமான செல்வமாகிய, சமதர்மத்துக்கு, மார்ஷல் சியாங்கே-ஷேக், பிரதிநிதியல்ல, தோழருமல்ல, வைரி என்றால், அது தவறாகாது.

டாக்டர் சன்-யாட்-சென் அவர்களை, சீனநாட்டின் சிகப்பு ரோஜா என்றோம். மார்ஷல் சியாங்கே ஷேக், சீனநாட்டின் வெள்ளை ரோஜா என்போம்.

இருவரும் கிருஸ்தவ மார்க்கத்தைத்தழுவியவர்களே. மேனாட்டு முறைகளைக் கீழ்நாடு அடியோடு ஒதுக்கித் தள்ளிவிட்டால், காலம் கீழ்நாடுகளை ஒதுக்கித்தள்ளிவிடும் என்ற உண்மையை இருவரும் உணர்ந்தவர்கள். ஆனால், இருவரில், மறைந்த டாக்டர் சென் மாசிலாமணி! சியாங்கின் கரம், சமதர்மிகளைச் சிதைத்த இரத்தக்கரை படிந்தது. ஆனால் அதனைச் சீனச் சமதர்மிகள் இன்று மறந்துவிட்டோம் என்று கூறுகின்றனர். ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டிய தன் அவசியத்தை உணர்ந்து சீனப்பொது உடமைப் படைகள், சியாங் சேனைகளுடன் சண்டையிடுவதை நிறுத்திக்கொண்டு, ஜப்பானுடன் போரிட்டுக்கொண்டிருக்கின்றன. சீனக்களத்திலே ஜப்பான் திணறுவதற்கு ஒரு முக்கியமான காரணம் சீனப்பொது உடமைப்படைகளின் பதுங்கிப்பாயும் போர் முறையாகும்.

டாக்டர் சன்யாட்-சென் மறைந்ததும், கோமிங்டாங் கட்சியில் பிளவு ஏற்பட்டது. சீனப்பொது உடமைக்காரர்கள், மார்ஷல் சியாங்கின் மனப்போக்கைக் கண்டு, வெகுண்டனர். மாஸ்கோவுடன் தொடர்புவைத்துக்கொள்ளவேண்டுமென்று தீவிரவாதிகள் துடித்துக்கொண்டிருக்க, மார்ஷல் சியாங், லண்டன், வாஷிங்டன், பாரிஸ், ஆகிய இடங்களுடன் இழையலானார். சமயத்துக்குத் தக்கபடி சாயும் சுபாவம் ஷேக்குக்கு உண்டு. புத்தமதத்தை விட்டு ஷேக், கிருஸ்தவரானதற்குக் காரணம், சீனாவின் சீமாட்டியை மணக்க வேண்டிய சமயம் ஏற்பட்டதால்தான். எனவே சமயத்துக்கேற்றபடி நடக்கும் சியாங் சர்க்காரை சீனப்பொது உடமைப்படை எதிர்க்கத் தொடங்கிற்று. சியாங் சீனப்பொது உடமைப்படையைச் சிதைக்கத் தொடங்கினார். சீனமக்கள் இருகட்சிகளாகி விட்டனர். பாட்டாளிகள், பொதுஉடமைப் படையின் பக்கம். சொத்து, சுகம், முதலிய பசைஉள்ளவர்கள் சியாங்கின் கட்சியில் சேர்ந்தனர். பொதுஉடமைவீரர்கள் இலட்சியபூமியில் உலவினர். சியாங், சீனமண்ணில், தமது காலை ஊன்றிக் கொண்டு நின்றார்.

சௌ-என்-லாய் என்ற பொதுஉடமை வீரனின் தலைமையில் புரட்சி தொடங்கிற்று. சீனரைச்சீனர் சுட்டு வீழ்த்தும் சோக சம்பவம் நடைபெறலாயிற்று. பொதுஉடமைப்படை சியாங்கால், வாட்டப்பட்டது. ஆனால் தலைவணங்கமறுத்து, பொதுஉடமைப்படை, ஒருபிரதேசத்தை இழந்தால் மற்றோர் பிரதேசம் புகுவதும் அதனையும் இழந்தால், காடுமலைகளில் சுற்றிக் கொண்டு போரிடுவதுமாக இருந்தது. இந்தப் போர்த் திட்டமே, இப்போது, ஜப்பானியரை எதிர்க்க, மார்ஷல் சியாங்காலும் கையாளப்படுகிறது.

சியாங்குக்கும் சீனப் பொது உடமைப் படைக்கும் நடைபெற்ற சமர்களில், பல திடுக்கிடும் சம்பவங்கள் நேரிட்டன. 1926ல், மார்ஷல் சியாங்-கே-ஷேக், பொது உடமைப் படையினால் பிடிக்கப்பட்டு, சிறைப்பட்டார். பலபொது உடமைக்காரர்கள், சியாங்கை தொலைத்து விட வேண்டுமென்று துடித்தனர். ஆனால் பொது உடமைப் படைத்தலைவருக்கு அந்தத்துணிவு பிறக்கவில்லை. ஏனெனில், பொது உடமைக்காரர்களிடம் இன்ப மான இலட்சியங்கள் இருந்தன என்றபோதிலும் நாட்டைக் கட்டிக்காத்தும், மக்களை ஒன்றுசேர்த்தும், சட்டம் நிலவச்செய்தும் சியாங்-கே-ஷேக் சீனப்பாமரரின் மனதைப் பரவசப்படுத்தி விட்டார். ஆகவே சீனாவின் செல்லப்பிள்ளையை ஏதாவது செய்தால், பிறகு பொது உடமைக்கட்சி என்றென்றும் கெட்டபெயருடன் உலவ வேண்டிநேரிடும். ஆகவே சியாங் கொல்லப்படவில்லை. மரணத்தின் பிடியில் சிக்கியபோதும் மார்ஷல் சியாங் மனமுடையவில்லை. பொது உடமைக்காரர்கள் எவ்வளவோ மன்றாடினார்கள், சியாங்கைத் தமது போக்கை மாற்றிக்கொள்ளும்படி! கைதியிடம் கெஞ்சினதே ஒரு விசித்திரம்! அதைவிடவிந்தை அந்தக்கைதி, திட்டமாகத் தானபிடித்த முயலுக்கு மூன்று கால்தான் என்று கூறினது. சியாங்கின் நெஞ்சுத் துணிவுக்கு இஃதோர் எடுத்துக்காட்டு. மார்ஷல் சியாங் பொது உடமைக்காரரிடம் சிறைப்பட்ட செய்திகேட்ட, அவரது மனைவி பொது உடமைக்காரரிடம்சென்று சமரசம்பேசி தனது கணவனைச் சிறைமீட்டார். ஒரு படையை அனுப்பி பொது உடமைக்காரர்களை ஒழித்துவிட்டு, சியாங்கை சிறைமீட்க வேண்டுமென்று சில தருக்கர்கள் யோசனை கூறினராம். அதன்படி நடத்திருப்பின் மார்ஷல் சியாங்-கே-ஷேக், பரிதாபகரமான முடிவெய்தி இருப்பார். கூறியமதியும் திடமனமும் படைத்த சியாங் இத்தகைய யோசனையை உதறித்தள்ளிவிட்டு, நேரே பொது உடமைக்காரருடன்பேசி நிபந்தனைகூட இன்றி சியாங்கை விடுதலைசெய்து கொண்டு வந்து சேர்ந்தார். இந்தச் சம்பவம், மார்ஷலின் மனோதிடத்தையும், அவரது மனைவியின் கூரிய மதியையும் காட்டுவதுபோல் சீனப் பொது உடமைத் தலைவர்களின், பெருந்தன்மையையும் காட்டுகிறதன்றோ! பொது உடமைக்காரர்கள் பழிபாவத்துக்கு அஞ்சாதவர்கள் என்று பிதற்றுபவர், இந்தச் சம்பவம் புகட்டும் பாடத்தைக் கவனிப்பார்களாக!

ஜப்பான், சீனாமீது பாய்ந்து, சீனசாம்ராஜ்யத்தைச் சிதைத்து, சீனமக்களை அடிமைகொள்ளவும், சீனாவின் செல்வத்தைச் சுரண்டவும் முனைந்ததும், சீனாவின் உள்நாட்டுப் பூசல் மறைந்து விட்டது. இது மகத்தானதோர் சம்பவமாகும். இலட்சியங்கள் வேறு வேறு என்ற போதிலும், பழய விரோதம் பலப்பல உள்ளன என்ற போதிலும், இன்று, இருதரப்பும், பொது எதிரியான ஜப்பானை அடக்கத் தீவிரமாக முற்பட்டிருக்கிறது. இந்த அரிய பாடத்தை, மற்ற நாட்டவர் மறக்கக்கூடாது என்று பலர் கூறுவர். ஆனால் இங்குள்ள ஒரு முக்கிய விஷயத்தை மறைத்தால், உண்மையை உணர முடியாது. சீனாவின் உள்நாட்டுப் பூசலுக்குக் காரணம், பொருளாதார பேத ஒழிப்பு முறையில் இருதரப்புக்குள் இருந்தஅபிப்பிராயபேதம். தேசீய வாதிகளுக்கும் பொது உடமை வாதிகளுக்கும் போர்! ஆனால் இருவரும் சீனர்! அதில், வித்தியாசம் இருந்ததில்லை, இன்றும் இல்லை. சீனாவில் இன வேற்றுமை, ஜாதிப்பூசல், மதத்தகராறு இல்லை. ஆகவே தான் அந்த மக்கள், நாட்டுக்கு மகத்தான நெருக்கடி ஏற்பட்டதும், ஒன்றுகூட முடிந்தது. இதன்காரணம், முன்னாளில், சன்யாட்சன், சீனமக்களிடை உண்டாக்கி வைத்த சமத்துவ உணர்ச்சியாகும்.

சீனா ஒன்று பட்டுவிட்டதே! மக்கள் ஒரு முக

(4ம் பக்கம் பார்க்க)

## அதோவாராண்டி

(11ம் பக்கத் தொடர்ச்சி)

துவிட்டு, பிறகு நீங்கள் கூறுங்கள், நான் ஆச்சாரி பக்தர்களை அசடர்கள்என்று சொன்னது 'திட்டு' ஆகுமா என்று. உல்லாசமாக ஒருவன் நாயைப்பிடித்துக்கொண்டு உலவிக்கொண்டிருந்தான். திடீரென்று ஒரு புலி வந்து விட்டது. அவன் நாயை விட்டு விட்டு ஓடிவிட்டான், நம்நாடு அந்த நிலையில் இருக்கிறது"—இது குட்டிக் கதை நிபுணர் கூடலூரில் பேசியதாக, கெட்டிக்காரர்கள் நடத்தும் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி. சந்தேகப்படுவோர், அந்த ஏடுகளில் எதையாவது எடுத்துப்பார்க்கட்டும்; படிக்கட்டும்; படிக்கப்பக்கநின்றேனும் கேட்கட்டும், ஆச்சாரியாரின் இந்த அழகான கதையிலேஉள்ள ஆபாசத்தை, அசடர்கள் காணமாட்டார்கள். மேற்படி கதைமூலம் அவர் புகுத்த விரும்பும் கருத்து ஜப்பான் எதிர்க்கவே பிரிட்டன், இந்தியாவை ஆண்டுவந்ததை விட்டு விட்டு ஓடிவிட்டது -என்பதாகும். புலிக்குப்பயந்து நாயை நடுத்தெருவில் விட்டு ஓடின புருஷனும், பிரிட்டன்! பிரிட்டிஷார் ஆச்சாரியாருக்கு வந்தனஞ்செலுத்துவார்கள், இந்த கதைக்காக. ஏன்? மகுடம் சூட்டிக்கொள் என்று ஆசியும்கூறுவார்கள். பிரிட்டனை, ஆச்சாரியார், ஒரு உல்லாச புருஷனுக்கு உவமையாக்கிக்கூறினார். உல்லாச புருஷன் மட்டுமா! புத்திகூர்மையுள்ளவன் என்றும் ஆச்சாரியார் தமது கதைமூலம் தெரிவிக்கிறார். எப்படி? புலியைக் கண்டதும், நாயைவிட நமது உயிரே பிரதானம், நாம் உயிரோடு இருந்தால் நானூறு நாய்கள் கிடைக்கும், ஆனால் நாமிறந்து நாய் இருந்தால், என்னபலன், என்று யோசித்தே, அந்த உல்லாச புருஷன், நாயை விட்டு விட்டு தான்ஓடி தப்பித்துக்கொண்டான். அத்தகைய புத்திசாதுர்யம் பிரிட்டிஷாருக்கிருப்பதாக ஆச்சாரியார் அர்ச்சிக்கிறார். மாதம் ஐந்நூறு வாங்கினதன் பலன் போலும்! அதுபோலவே, ஜப்பானுக்கும் ஆச்சாரியாரின் கதை, பூரிப்பை உண்டாக்கியிருக்கும். ஏன்? உல்லாச புருஷனை ஓடவைத்த புலிக்கு சமானமாகவன்றோ ஜப்பானைக் கூறுகிறார். ஆகவே அந்தப்புலி புன்னகை கொள்ளும், ஆனால், நம்நாடு, தாய்நாடு, என்ன எண்ண வேண்டிவரும்? ஆச்சாரியாரின் அபாரமான மூளைபலத்தால் சிருஷ்டிக்கப்பட்ட, அந்த சிறுகதையின் பாத்திரங்களில், பிரிட்டன் உல்லாச புருஷன், ஜப்பான் புலி, இந்தியா நாய்! தாய் நாட்டை, நாய் நாடாக்கும் கதை கூறும் "தலைவர்களை" வேறுஎங்கு காணமுடியும்!

இத்தகைய கதைகளைக்கூறி, ஆச்சாரியார், மக்களைச்சிரிக்கவைத்து, என்னபலன் காண்பாரோநானறியேன். கூறும் கதைகளில், பொருத்தம் இருக்கவேண்டாமோ! தாய்நாட்டை, நாய்க்கு உவமையாகக் கூறும் கதை தவிற வேறு கிடைக்கவில்லையா!! இவ்வளவும் எதற்கு? பதவிபெறத்தானே!! பரிதாபம்!!! இதற்கா, இத்தனை சுழல் சுற்றுப்பிரயாணம், சுயராஜ்ய ஆரூடம்?

அதுசரி! நான் கேட்டுவிடுகிறேன், இதற்கா இப்படி ஆச்சாரியார் நடப்பது என்று? அவருக்கல்லவா தெரியும், அவர்மனதில் உள்ள வேதனை. "ஏலே, ஏதாகிலும் வேலைசெய்து பிழைக்காமே, பாட்டுப்பாடி ஏய்க்கிறயோ" என்று காசுபோடாதவர்கள், "அதோ வாராண்டி கொடுக்கூர் ஆறுமுகத்தாண்டி" என்று பாடுபவனைக் கேட்டால், அவன்என்ன சொல்கிறான், "எங்கேயும் வேலை கிடைக்கல்லே சாமி, மூணுநாளா பட்டினி ராஜா, ஒருகாசுகொடுங்க" என்பான். ஆச்சாரியார் தமது நண்பர்களிடம், "என்னசார்! வேறே என்ன இருக்குபேச. வேலைபோயி எவ்வளவோ நாளாயிடுத்தே, திரும்பப் பெற வேண்டாமோ" என்று கூறுகிறாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அவரது சகலநடவடிக்கையும் எனக்குத் தெரியுமா?

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம் ஆறாக ஓடவும், புகை விண்ணையும் மண்ணையும் மறைக்கவும், வாழ்க்கை சரிந்து, மண்டலங்கள் மரித்து, மக்கள் மாளும் மனவேதனையைப் பற்றித்தான் கேள்விப்படுகிறோம். இந்த நேரத்தில் சுயராஜ்யம், அதாவது தேனும் பாலும் ஓடும் நிலைமை வருகிறதென, மனுமாந்தாதா வழிவந்த மாஜி முதலமைச்சர் கூறுகிறார் என்றால், மகிழ்ச்சி வருமல்லவா! ஆனால் உண்மையிலே என்ன வருகிறது? சுயராஜ்யமா? கொம்புள்ள குதிரைமீது ஏறிக்கொண்டு வருகிறது, கொண்டுவாருங்கள் ஆரத்தி!!

ஆச்சாரியாருக்குந் தெரியும், அவர்பேச்சைக்கேட்டுக்கொண்டிருந்த அன்பர்களுக்குந் தெரியும், வந்து கொண்டிருப்பது, வஞ்சகமும் வலிவும் படைத்த ஜப்பானியர் போர்வெறி என்று. இருப்பினும், ஏதோ அவர் கூறுகிறார், நாம் கேட்போம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வது, பிறனுடைய ஆட்சியில் இராமலிருப்பது

இதுதான் சுயராஜ்யம்! இதனை இன்று, இங்கு காண வேண்டுமென்று ஆச்சாரியாரும், பிறரும் தீர்மானித்தால், தீர்மானித்தபடி பெற்றால், இந்த நாட்டு, ஆட்சியை அவர்கள் நடத்த, மந்திரிகளாக வரத்தயாராக இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் நாட்டை, எதிரியிடமிருந்து தப்பவைக்க, பிரிட்டிஷ் அமெரிக்க-சீனா-ரஷ்ய கூட்டுச்சக்தியின் தயவின்றி, இவர்களால் முடியுமா என்று கேட்கிறேன். கதை பேசுவதைக் கட்டிவைத்துவிட்டு, காரியத்தைக் கவனித்துப் பேசட்டும் ஆச்சாரியார். நாளையத்தினம், சர்ச்சில், "இனி உங்கள் நாட்டை நீங்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள், நாங்கள் பிரிட்டனைப் பாதுகாக்க எமது முழு சக்தியையும், நேரத்தையும் செலவிடப்போகிறோம்" என்று கூறிவிட்டு, விலகிவிட்டால், ஆச்சாரியார், இந்த நாட்டை ஜப்பானியச்சூறாவளியில் நசித்துப்போகாது தடுக்க, அஸ்வமேதயாகம் செய்ய இருக்கிறாரா, அகண்ட பரிபூரணனந்தருக்கு அஷ்டார்ச்சனை செய்யப் போகிறாரா, அப்சரசுகளை அனுப்பி, ஜப்பானியரை சாகசத்தால் வீழ்த்தச் செய்யுங்கள் என்று தேவேந்திரனுக்குத் தூதுவிடப் போகிறாரா, தேவர்கள், கின்னரர், கிம்புருடர், சித்த வித்யாதரர்களை, டாங்கிப்படை, விமானப்படைகளில் சேர்த்து ஜப்பானை முறியடிக்கச் செய்வாரா. எப்படி இந்த சக்தியைக்கொண்டு, ஜப்பானின் பாய்ச்சலைத் தடுப்பார், நாட்டைக்காப்பாற்றுவார், என்று கேட்கிறேன், 40கோடிமக்களின் உயிர், உடமை, மானம், இவைகளை, நாளையத்தினம் ஜப்பான் நாசஞ்செய்யாதிருக்க, ஆச்சாரியார் என்ன ஏற்பாடு செய்ய இருக்கிறார்? ஆகாய விமானமேறி, உக்கிரமான போர்நடக்கும் களஞ்சென்று, அங்கு எதிரியின் பீரங்கி வேட்டு, விலா எலும்பை முறிக்க? வேதனையையும் பொறுத்துக்கொண்டு, போர் திட்டத்தைப்புது முறுக்குடன் கவனிக்க முன்வந்துள்ள வேவல்போல், ஆச்சாரியார் அசகாயசூரரா! ஐந்தாண்டுகளுக்கு மேலாக ஜப்பானியரின் எதிர்ப்பைச் சமாளித்துவரும் சியாங்-கே-ஷேக் போன்ற வீரரா? உருவத்தை நம்பியா? உள்ளத்தின் உறுதியை நம்பியா? உற்றார் உறவினரின் தன்மையை நம்பியா? எதை நம்பி, ஆச்சாரியார், இந்நாட்டைக் காப்பாற்றுவார் என்று நாம் நம்பிக்கை கொள்வது என்று கேட்கிறேன். பதில்கூற முடியாதுபோனாலும், தேசிய வாதிகள் யோசித்துப் பார்க்கட்டும்.

ஒன்று சாத்தியம்! மியூனிச் ஒப்பந்தத்தைப்போல் ஆச்சாரியார் கோஷ்டி சுயராஜ்ய ஆட்சிபெற்று, ஜப்பானுடன் பேரம் பேசக்கூடும். அதைவிட மோசமான, பெட்டெயின் படலத்துக்கும் ஆச்சாரியார் கோஷ்டி தயாராகக்கூடும். இத்தகையமானத்தை மறந்தசெயல் செய்து, மண்டியிட்டு வாழ்ந்து, ஜப்பானிய சோயா பீன்ஸ் பாயசத்தைப்பருகி, அவர்களின் பாதந்தாங்கிகளாக இருக்கவா, சுயராஜ்யம்! வசீகரமேனியை வனிதைபெருவது, விபசாரத்துக்குப் பயன்பட்டால், வசீகரம் கெட்டு, வாழ்க்கையின் ருசிகரம் வரண்டுபோக வெகுகாலம் பிடிக்குமா? அதுபோல், நாளேசுயராஜ்யம் பெற்று, மறுதினம் மாற்றானிடம் மண்டியிட்டு வாழ வேண்டுமா? இதற்கா, "இதோ வந்துகொண்டே இருக்கிறது சுயராஜ்யம்" என்று கூறுகிறார் ஆச்சாரியார். இதோ மற்றோர்லட்சம் போர்வீரர்கள் தயார், ஆயிரம் விமானங்கள் தயார், பலநூறு டாங்கிகள் கிளம்புகின்றன, பீரங்கிகள் எண்ணற்றன், கப்பல்கள் பலப்பல, என்று பேசவேண்டிய இந்த வேளையில், "இதோ சுயராஜ்யம்" என்று பேசுகிறாரே, இவர், இதுபொருத்தமானதா, என்று மரமண்டைகள் யோசித்துப்பார்க்க வேண்டாம், மற்றவர்கள் யோசிக்கட்டும்.

ஆச்சாரியார், சுயராஜ்யம் கேட்கிறார், ஆனால் அத்துடன் இந்தப்போரில் ஜப்பானைஎதிர்க்க. பிரிட்டனின் ஆயுதபலத்தையும், கோருகிறார், என்று மேதாவிகள் வியாக்யானங் கூறுவர். பிரிட்டனின் கூட்டுறவும், பாதுகாப்பும் இல்லாமல், இப்போது இந்தியா, எந்த எதிரியையும் எதிர்த்துநிற்க முடியாது. இத்தகையை பாதுகாப்புக்காக, பிரிட்டனிடம் பல்லிளித்துக்கொண்டு நாம் நிற்கும்போது நாம் சுயராஜ்யம் பெற்றுவிட்டதாகக் கூறுவது பொருந்துமா? பொருள் உண்டா? புத்திக்கும் அந்த குயுக்திக்கும் எவ்வளவு வித்யாசம்! ஏன் இன்னமும் குயுக்தி அவரது மண்டையைக் குடைகிறது. மலேயா, சிங்கப்பூர், ரங்கூன் ஆகிய இடங்களில் எதிரியின் குண்டுகள் நம்மக்களின்மண்டைகளைப் பிளந்தெறிந்த பிறகுமா, நம் நாட்டுத் 'தலைவர்கள்' மூளையில் இத்தகைய குயுக்திகள் முளைக்க வேண்டும்! இதற்கோர் பரிகாரமில்லையா?

மந்திரிவேலை கொடுங்கள் என்று ஆச்சாரியார் கேட்கட்டும், கிடைத்தால் அதனைக்கட்டிக்கொண்டு புரளட்டும். மீண்டும் மந்திரி வேலை வருகிறது என்று சொல்லிக்கொள்ளட்டும், சரணாகதி பட்டையை அணிந்துகொள்ளட்டும், நான் குறுக்கிடவில்லை. ஆனால், மந்திரி வேலையை மனதிலே வைத்துக்கொண்டு, சுயராஜ்யம் வருகிறது என்று ஏன் கூறவேண்டும், என்றுதான் கேட்கிறேன். மாட்டுச்சிறுநீரை "பஞ்சகவ்யம்" என்று கூறி, பேதைகளைப்பருகவைக்கும், அந்த சம்பிரதாய அகராதிப்படி, ஆச்சாரியார் கோஷ்டிஅதிகாரம் பெறுவதற்கு சுயராஜ்யம் என்று பெயரிட்டிருக்கிறார் போலும்.

சுயராஜ்ய நாட்டில், அந்நாட்டுப் பாதுகாப்புக்கான சக்தி திரண்டிருக்கும். இங்கு, இன்றுவரை, அத்தகைய சக்தி பிரிட்டனின் பாதுகாப்பாகத்தான் இருக்கிறது. நாடுசுயராஜ்யம் பெறுவது என்றால், அதன் உண்மையான பொருள், நாட்டை எந்த எதிரியும் தாக்க முடியாதபடி, தாக்கத்துணியாதபடி, தாக்கினாலும் பலன்பெற முடியாதபடியான, திறம் இருப்பது என்பதுதான். அந்தத்திறம், நம்நாட்டுக்குவர வேண்டுமானால், மாம்பலத்தாருக்கு மந்திரிவேலை கொடுத்துவிட்டால் போதாது. நமது மூதாதையர் பெயரைக் கூறிப் புரோகிதன் பறித்துக்கொண்டு போகும் பணமும் பண்டமும், "மோக்ஷ ராஜ்யத்துக்குப்போவதாகக் கூறும் மோசடிப் பேச்சுக்கும், காங்கிரஸ் கூட்டத்திற்கு "கனம்" வேலைகொடுத்தால், நாட்டுக்கு சுயராஜ்யம் வந்ததாகப் பொருள் என்று கூறும் பேச்சுக்கும், வித்தியாசமில்லை. இரண்டும் அபத்தம்! ஆனால் இரண்டையும் நம்பும் அசட்டுப் பேர்வழிகள் ஏராளம்!

அசட்டுப் பேர்வழிகள் என்று நான் திட்டுவதாகக் கருதாதீர்கள். இதோ ஒரு உதாரணம் தருகிறேன் படித்

(10ம் பக்கம் பார்க்க)

உ

# " கந்த விலாஸ் "

## அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்.,

ஜவுளி வியாபாரம், ஆடிசன்பேட்டை. காஞ்சீபுரம்.

கிளை ஆபீஸ்கள்:—

கடைவீதி
சேலம் டவுன்.



சுவாமி தேருக்கு எதிரில்
கீழரதவீதி
திருநெல்வேலி.

காஞ்சீபுரம், சேலம், எங்கள் சொந்தக் கைத்தறியில் நவீன நாகரீகத்திற்கேற்றவாறு தயாரிக்கப்பட்ட பட்டு & ஜவுளி சேலைகளும், பட்டு & நூல் ஜரிகை துணிகளும், பனாரஸ், கராச்சி, கொள்ளேகாலம், பெங்களூர், மதுரை, கோயமுத்தூர், புல்லம்பேட்டை, புதட்டூர் முதலிய ஊர்களில் தயாராகும் சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், மில்லில் தயாரிக்கப்பட்ட கோட்டிங், ஷர்ட்டிங், சீட்டி, வாயில் துணி முதலான எல்லாவித ஜவுளிகளும் விலை சகாயமாயும், சரக்கு நயமாயும், சாயம் உத்திரவாதமாயும் எங்களிடம் கிடைக்கும். ஒரு முறை வாங்கி உடுத்தி பார்க்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**கந்தவிலாஸ் :: A. K. & SONS.,**





# மந்தாரவதி

நடிகர்கள்.

எஸ். டி. சுப்பையா
டி. ஆர். ராஜகுமாரி
காளி. என். ரத்தினம்
பி. ஜி. வெங்கடேசன்
எஸ். எஸ். கொக்கோ
ஸி. டி ராஜகாந்தம்
கே. எஸ். ஆதிலக்ஷ்மி
லூஸ் ஆறுமுகம்
வி. கே. கமலம்

விவரங்களுக்கு எழுதவும்.

**பொன்ராஜ் பிக்சர்ஸ்,**
சின்னகாஞ்சீபுரம்.

கோயமுத்தூர், திருச்சி, தஞ்சை,
தென் வட ஆர்க்காடு, சேலம் செங்கல்
பட்டு ஜில்லாக்களின் உரிமையாளர்.



Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M A at 51 Nimanthakara Street, L. Conjeeveram.